**பட்டங்கல பல்கலைக்கழகக் கல்லூரி – 2017**

---

தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்த பட்டங்கல பல்கலைக்கழகக் கல்லூரியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 இன் 01 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக சட்டவாக்கத்தின் 17(2) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 31 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 47(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகக் கல்லூரியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கல்லூரியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கைகளின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த பட்டங்கல பல்கலைக்கழகக் கல்லூரியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் கடைசியாகப் பெற்ற சம்பளத்தின் அடிப்படையில் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டிய போதிலும், அதற்கு முரணாக 2018 சனவரி மாதத்தின் சம்பளங்களின் அடிப்படையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பணிக்கொடைக்கான ஏற்பாட்டில் ரூபா 43,487 மிகைத் தொகை காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணங்களுக்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்கலைக்கழக் கல்லூரிக்கு 2015 ஒக்தோபர் 14 இல் திறன் துறை அபிவிருத்திச் செயற்திட்டத்தினால் அளிக்கப்பட்ட 40 பொருள் வகைகளின் பெறுமதியினை இனங்கண்டு கணக்கிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 சனவரி தொடக்கம் 2017 மே வரையான காலப்பகுதி தொடர்பில் ஊழியர் சேமலாப நிதிசார் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிகள் செலுத்தாமை காரணமாக விதிக்கப்பட்ட மிகைக்கட்டணம் ரூபா 867,474 தொகையொன்று நிதிக்கூற்றுக்களில் அட்டுறுச் செலவினமொன்றாக காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்காய்வு சான்றுகளின்மை

2015 யூலை 02 இல் திறன் துறை அபிவிருத்தி செயற்திட்டத்தினால் மொழி ஆய்வுகூடமொன்றின் (''சிறிய'' மொழி ஆய்வுகூடம்) ஸ்தாபிப்புக்கு விநியோகிக்கப்பட்டிருந்த ரூபா 1,916,590 பெறுமதியுடைய 18 கணனிகள் செயற்திட்டத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்கள் பட்டியலில் காட்டப்பட்டிருந்த போதிலும், அந்த கணனிகளின் பௌதிக ரீதியான உள்ளதன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

---

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 135 | காசு கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய செயற்பாடுகள் பல்வேறு உத்தியோகத்தர்களினால் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் பரீட்சிக்கப்படக்கூடியதாக பல்வேறு தரப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பல்கலைக்கழக கல்லூரியில் இரண்டு முகாமைத்துவ உதவியாளர்கள் காணப்பட்ட போதிலும் உறுதிச்சீட்டுக்களினை தயாரித்தல், காசுப்புத்தகத்தில் பதிதல், காசோலை எழுதுதல், வங்கி இணக்கக்கூற்றுக்களினை தயாரித்தல் மற்றும் சில்லறைச் செலவுக் காசு செயற்பாடுகள் போன்ற செயற்பாடுகளினை ஒரு உத்தியோகத்தர் மேற்கொண்டிருந்தார். |
| (ii) நிதிப்பிரமாணம் 454 | ஒவ்வொரு பிரிவிலும் பொருட்களின் பெறுகை மற்றும் விநியோகம் தொடர்பில் இருப்புப் புத்தகமொன்றினைப் பேணவேண்டுமென வேண்டப்படுகின்ற போதிலும், நிர்மாண தொழில்நுட்ப ஆய்வுகூடங்களிலுள்ள இருப்பு வகைகள், பல்கலைக்கழக கல்லூரியின் விவசாய இயந்திர தொழில்நுட்பம் மற்றும் உபசரணை முகாமைத்துவம் தொடர்பில் இருப்புப் புத்தகம் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 இன் ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்களுக்கான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை தீர்வை அதிகாரச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 7 ஆம் பிரிவு | முத்திரை தீர்வைக்கான கூட்டு அதிகாரசபையொன்றாக பல்கலைக்கழக கல்லூரி பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்புடைய முத்திரை தீர்வையினை சேகரிப்பதற்கு மற்றும் தொடர்புடைய காலாண்டின் இறுதியிலிருந்து 15 நாட்களுக்குள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அந்தக் கட்டணங்களினை அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 போதியளவான அதிகாரத்தினால் ஆதரவளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பல்கலைக்கழக மானியங் ஆணைக்குழுவின் கீழ் கட்டுப்பாட்டிலுள்ள தேசிய மட்ட பல்கலைக்கழகங்களுடன் அந்தப் பல்கலைக்கழகங்களுக்கு விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கைகளினை சமமாக கருத்திற் கொள்வதன் மூலம் செலுத்துகைகள் மேற்கொள்ள முடியாதிருந்த போதிலும், தேசிய தொழில்சார் தகைமைகளின் (என்வீகியூ) 5,6 டிப்ளோமா மட்டத்தில் பாடநெறிகளினை நடாத்துகின்ற இந்தப் பல்கலைக்கழக கல்லூரியின் செலுத்துகைகளினை மேற்கொள்கையில், 2011 மார்ச் 18 இன் 954 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் அடிப்படையில் கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினர்க்கான ஆட்சேர்ப்பின் தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூபா 1,000 ஆன ரூபா 47,000 தொகையும் போக்குவரத்துப் படிகளாக ரூபா 21,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழக கல்லூரியின் நிதிசார் விளைவுகளினை முன்னைய ஆண்டின் யூன் 01 தொடக்கம் திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான ரூபா 2,775,099 ஆன மிகையை நிதிசார் விளைவுகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 4,130,240 ஆன பற்றாக்குறையொன்று காணப்பட்டமையினால் நிதிசார் விளைவுகளில் ரூபா 6,905,339 பற்றாக்குறையொன்றை சுட்டிக்காட்டுகின்றது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழக கல்லூரியினால் 2017 - 2022 காலப்பகுதி தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் ஆய்வுகூட வசதிகளை முன்னேற்றுவது பற்றிய செயற்பாடொன்று உள்ளடக்கப்பட்டிருக்காமையினால் அளவு கணக்கெடுப்பு (Quantity Surveying), பண்ணை இயந்திர தொழிநுட்பம் மற்றும் நிர்மாண தொழிநுட்பத்திற்கான ஆய்வுகூடங்கள் மாணவர்களின் கற்கைக்கு முறையாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும், ரூபா 59,530,922 பெறுமதியான பயிற்சி உபகரணங்கள் பல்கலைக்கழக கல்லூரிக்கு அளிக்கப்பட்டதுடன் ஆய்வுகூடங்கள் முறையாக தயாரிக்கப்பட்டிருக்காமையின் காரணமாக 2015 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது.

(ஆ) பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டில் பூர்த்தியாக்குவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட ரூபா 8.5 மில்லியன் தொகையான பெறுகை செயற்பாடுகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்காததுடன் பெறுகை திட்டம் முகாமைத்துவ கட்டுப்பாடொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய தொழிற் தகைமைகள் மட்டம் 5,6 மற்றும் 7 பாடநெறிகள் மற்றும் அந்த மட்டத்திற்கு சமமான ஏனைய தொழிநுட்ப பாடநெறிகளினை நடாத்தும் பொருட்டு 2014 இன் 01 ஆம் இலக்க தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழக கட்டளைச்சட்டத்தின் கீழ் பல்கலைக்கழக கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்திருந்த போதிலும் அந்த இலக்குகளினை அடைவதற்கு இயலக்கூடியதாக பாடநெறிகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக, 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பல்கலைக்கழக கல்லூரியினால் நடாத்தப்பட்ட 06 பாடநெறிகள் தொடர்பில் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், பாடநெறிகளுக்கான அங்கீகாரம் அவ்வாறு பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) (i) 2017 ஆம் ஆண்டில் முதல் வகையின் ஆரம்ப மட்டம் தொடர்பில் விநியோகிக்கப்பட்ட பரீட்சை முடிவுகளின் பிரகாரம், 05 பாடநெறிகள் தொடர்பில் 09 பாடங்களுக்கு 30 சதவீதம் தொடக்கம் 63 சதவீதம் வரையான வீச்சொன்றில் மாணவர்களின் சித்திச் சதவீதம் காணப்பட்டதுடன் அதற்கு ஏற்பட்ட காரணங்களினை பரீட்சிப்பதன் மூலம் தேவையான நடவடிக்கைகளினை எடுப்பதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) பாடநெறிகளினைப் பின்பற்றியிருந்த 153 மாணவர்கள் முதல் வகையின் ஆரம்ப பரீட்சையின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார பாடத்திற்கு தோற்றியிருந்ததுடன் அதில், 73 சதவீதம் சித்தியடையவில்லை அல்லது பலவீனமான சித்தியினைப் பெற்றிருந்தனர். முறையானதொரு முன் மதிப்பீடொன்று இன்றி விரிவுரைகளுக்கு வருகைதரு விரிவுரையாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டமை காரணமாக மாணவர்களின் பெறுபேறுகள் குறைந்ததாகக் காணப்பட்டிருந்தது.

(இ) 2017 ஆம் ஆண்டில் கூட்டிணைந்த திட்டத்தில் காட்டப்பட்ட அனைத்துப் பாடநெறிகளுக்கும் அங்கீகாரத்தினைப் பெறல், தச்சுவேலைப் பட்டறையொன்றை நிர்மாணித்தல், பாதுகாப்பு வேலியொன்றை இடுதல் மற்றும் பிரிவுகளுக்குள் அலுவலக இடைவெளிகளினை ஏற்படுத்தல் போன்ற செயற்பாடுகளினை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்த அறிக்கைத் திகதி வரையிலும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு சொந்தமாகக் காணப்பட்ட பல்கலைக்கழக கல்லூரியினால் பயன்படுத்தப்பட்ட 5 ஏக்கர் காணிகளினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குடிநீர் தொடர்பில் பல்கலைக்கழக கல்லூரியினால் முகங்கொடுக்கப்பட்ட சிக்கலான நிலைமை காரணமாக, நீர் கிணறு பம்பொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு ரூபா 315,380 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அது கூட தோல்வியடைந்திருந்ததுடன் குடிநீர் மீதான பிரச்சினை இதுவரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 சனவரி 01 இல் உதவி நூலகர் பதவிக்கு உத்தியோகத்தரொருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், 2017 சனவரி 23 இலிருந்து பதில் உதவி பதிவாளர் பதவிக்கு அந்த உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தமை காரணமாக நூலகத்தின் கடமைகளினை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் மாணவர்களுக்கு நூலகப் புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல்கலைக்கழக கல்லூரியினால் நடாத்தப்பட்ட 06 பாடநெறிகளில் நிகழ்வு (Event) முகாமைத்துவம், விருந்தோம்பல் முகாமைத்துவம் மற்றும் சுற்றுலா மற்றும் பிரயாண முகாமைத்துவம் ஆகிய 03 பாடநெறிகள் தொடர்பில் நூலகத்தில் புத்தகங்கள் காணப்படாமை காரணமாக, அந்தப் பாடநெறிகளினைப் பின்பற்றுகின்ற மாணவர்களின் நூலக பாவனை பலவீனமானதொரு மட்டத்தில் காணப்பட்டிருந்ததுடன் இது தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) பல்கலைக்கழக கல்லூரியினால் தயாரிக்கப்பட்ட கற்கை நேர அட்டவணையில் ஒவ்வொரு வகை மாணவர்களினதும் பெறுபேறுகளினை விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்ட நேர காலப்பகுதி உள்ளடக்கப்பட்டிருக்காததுடன், 2017 இல் ஆரம்ப மட்டத்தின் பரீட்சைகள் நடாத்தப்பட்டு 03 மாதங்களுக்குள் விடைத்தாள்களினை பரீட்சிப்பதன் மூலம் இறுதி பெறுபேறுகள் உறுதிப்படுத்தப்பட்ட வேண்டியிருந்த போதிலும், பெறுபேற்றுக் குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கு மற்றும் மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கு 07 மாதங்களுக்கு மேல் செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) 2015 இல் திறன் துறை அபிவிருத்தி செயற்திட்டத்தினால் பல்கலைக்கழக கல்லூரிக்கு 5CD415FOMW மற்றும் 5CD4092RGD ஆம் இலக்கத்தில் தோன்றிய HP மாதிரி இரண்டு மடிக்கணனிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த 02 மடிக்கணனிகள் பல்கலைக்கழக கல்லூரியில் காணப்படாததுடன் அதற்கு பதிலாக NXML TSG00850308AE13400 ஆம் இலக்கத்தில் தோன்றிய Acer மாதிரியின் மடிக்கணனியொன்று மாத்திரம் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பிலான பிரச்சினை இது வரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.3 பதவியணியின் நிர்வாகம்**

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழக கல்லூரி 6 பாடநெறிகளினை நடாத்துகின்ற போதிலும், 2018 மார்ச் 18 வரையிலும் 05 விரிவுரையாளர்கள் மாத்திரம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் பாடநெறிகளுக்கு விரிவுரையாளர்களின் போதிய தொகை ஆட்சேர்ப்புச் செய்யப்படாமை காரணமாக வருகைதரு விரிவுரையாளர்களுக்கு ரூபா 2,151,700 தொகை ஏற்பட்டிருந்தது. மேலும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 05 செயன்முறையாளர் (Demonstrator) பதவிகள் காணப்பட்ட போதிலும், இது வரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொது பட்டமொன்றுடன் விரிவுரையாளர்களினை ஆட்சேர்ப்புச் செய்கையில் பல்கலைக்கழக கல்லூரியின் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் கலாநிதிப் பட்டம் காணப்படாதிருப்பின் பட்ட தகைமையுடன் ஒரு வருட பட்டப்பின் பட்டத்துடன் (முதுமானிப் பட்டம்) பட்டமளிப்பின் பின்னர் 05 வருடங்கள் தொழில்சார் தகைமை அல்லது பட்டமளிப்பின் பின்னர் 08 வருடங்கள் தொழில்சார் தகைமை வேண்டப்படுகின்றது. இருப்பினும், மேற்குறித்த தகைமைகள் திருப்திப்படாது காணப்பட்ட போதிலும், விவசாய இயந்திர தொழில்நுட்பம் மற்றும் நிர்மாண தொழில்நுட்ப பாடநெறிகளுக்கு இரண்டு கனிஷ்ட விரிவுரையாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

(இ) வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றிலிருந்து பொது பட்டமொன்றுடன் பட்டம்பெற்ற, அளவுசார் அளவியல் (Quantity Surveying) பாடநெறிக்கு 2017 மே 04 இல் கனிஷ்ட பெண் விரிவுரையாளர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம், பட்டத்துடன் ஆய்வொன்று உள்ளடங்களாக 02 வருட பட்டப்பின் பட்டம் பெறப்படல் வேண்டும். இருப்பினும், இந்த பெண் விரிவுரையாளர் பட்டப்பின் தகைமையைக் கொண்டுள்ளமைக்கு எவ்வித தகவலும் வெளிப்படுத்தப்படாததுடன் இந்த நியமனம் எவ்வித அதிகுறைந்த தகைமையும் திருப்திப்படாதிருந்த போதிலும் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைதல்

ஐக்கிய நாடுகள் 2030 நிகழ்ச்சிநிரல் மற்றும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் அமைச்சரின் செயலாளரினால் விநியோகிக்கப்பட்ட 2017 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய என்பி/எஸ்பி/எஸ்டீஜி/17 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அனைத்து பொது நிறுவகங்களினால் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென வேண்டப்படுகின்ற போதிலும், மீளாய்வாண்டுடன் தொடர்புடைய தமது பரப்பின் கீழ்வரும் செயற்பாடுகள் தொடர்பில் எவ்வாறு அமுல்படுத்தப்பட வேண்டும் என்பது அறிவிக்கப்பட்டிருக்காமை. காரணமாக, பல்கலைக்கழக கல்லூரியினால் அந்த இலக்குகளின் அடைவுகளினை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் மற்றும் அந்த இலக்குகளினை அடைவதற்கான வரைபடங்கள், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள், குறிக்கோள்களினை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

2003 யூன் 02 இன் பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம், கணக்காய்வுக் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் 3 மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வுக் குழு கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டுமென வேண்டப்படுகின்ற போதிலும் அது அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வவ்போது பல்கலைக்கழகத்தின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் பரப்புக்கள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | சொத்துக்கள் கணக்கிடப்பட்டிருக்காததுடன் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பதவியணியினர் நிர்வாகம் | பதவியணியினர் ஆட்சேர்ப்பு முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் நாளதுவரையாக்கப்பட்ட முறையொன்றில் தனிநபர் கோவைகளினைப் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |